பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 166

திங்கட்கிழமை
12 மே 2025

சித்திரை 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## மீண்டும் 'ஆனையிறவு உப்பு'

யாழ்ப்பாணம், மே 12
ஆனையிறவில் உற்பத்தி செய்யப்படும் உப்பு "ஆனையிறவு உப்பு" என்ற பெயருடன் விநியோகிக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் 11



100 அடி பள்ளத்தில் கவிழ்ந்து

# இ.போ.ச. பஸ் கோர விபத்து; 21 பயணிகள் உயிரிழப்பு!!

இறம்பொடை, கெரெண்டியெல்லப் பகுதியில் பயங்கரம்

கொழும்பு, மே 12
இறம்பொடை, கெரண்டியெல்ல பிரதேசத்தில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் நடந்த பயணிகள் பஸ் விபத்தில் 21 பேர் உயிரிழந்துள்ளனர். 11



## குழந்தையை காக்க போராடிய தாய்

விரிவு பக்கம்:-11

## விபத்தில் இறந்தோரின் குடும்பத்துக்கு ரூ.1 மில்.

கொழும்பு, மே 12
இறம்பொடை, கெரண்டியெல்லப் பிரதேசத்தில் நேற்றுக் காலை நடந்த பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா ஒரு மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது. 11

## ரயிலுடன் மோதி குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம், மே 12
பளை, கச்சார்வெளியில் நேற்றுக்காலை நடந்த ரயில் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 09



## சங்குக்கூட்டணி ஆதரவை தமிழரசுக்கு வழங்குவோம்!

சித்தார்த்தன் தெரிவிப்பு

விரிவு பக்கம்:-09

## திருமணமான ஒரே மாதத்தில் உயிரிழந்த இளைஞர்

யாழ்ப்பாணம், 12
ஒரு மாதத்துக்கு முன்னர் திருமணமான இளைஞர் ஒருவர் திடீரென வாந்தி எடுத்து உயிரிழந்துள்ள 11

## அரசியற்கைதி கிருபாகரனை மகஸின் சிறைக்கு மாற்றுங்கள்

கஜேந்திரகுமார் எம்.பி. அழுத்தம்

கொழும்பு, மே 12
தமிழ் அரசியல் கைதியான கிருபாகரன் காரணங்கள் கூறப்படாது மகஸின் சிறைச்சாலையில் இருந்து அம்பாந்தோட்டைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். அவர் மீண்டும் 11

முள்ளிவாய்க்கால் வாரத்தைக் குழப்ப

## வலி. வடக்கு மக்களின் காணிகளில் கோலாகல வெசாக் களியாட்டங்கள்!

பெருமெடுப்பில் இராணுவம் ஏற்பாடு

விரிவு பக்கம்:-11

## புரச்சந்தி புராணி



'சனங்கள் காணியில்லாம திண்டாடேக்க உவையளுக்கு கொண்ட்டாட்டம் கேக்குது கண்டியளோ'



தமிழர்கள் மீதான

## இனவழிப்பு நினைவுத் தூபி கனடாவில் திறந்துவைப்பு!

விரிவு பக்கம்:-09

## இனப்படுகொலையை மறுப்போர் கனடாவை விட்டு வெளியேறுங்கள்!

பிரம்டன் நகர மேயர் திட்டவட்டம்

விரிவு பக்கம்:-11

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 11.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4070 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 27 42 72 78 |
| விசேட எழுத்து | D |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 11.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1137 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 12 28 34 45 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 11.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0096 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 1 7 2 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 11.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2176 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 01 |
| வெற்றி இலக்கங்கள் | 06 34 49 63 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 11.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5828 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 8 4 9 5 9 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 11.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1858 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 06 31 36 78 |
| விசேட எழுத்து | L |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 11.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0403 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 9 5 9 3 |

# அதிக ஆசனங்கள் எமக்கே; ஆட்சியமைக்க ஆதரவளிக்குக!

## தமிழரசுக்கட்சியின் செயலர் சுமந்திரன் கோரிக்கை

**யாழ்ப்பாணம், மே 12**

**ஒரு சபையில் குறித்த ஒரு கட்சிக்குக் கூடுதலான ஆசனங்கள் இருந்தால் அந்தக் கட்சிக்கு நிர்வாகத்தை அமைக்கக்கூடிய உரிமை பொதுவாக இருக்கும். அந்தக் கோட்பாட்டுக்கு இணங்கி ஆதரவளிக்குமாறு தமிழ்க்கட்சிகளிடம் விநயமாக கோருகிறேன் என்று தமிழரசுக்கட்சியின் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

தமிழரசுக்கட்சியின் அரசியற் குழுக்கூட்டம் வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 35சபைகளில் நாம் தனிப்பெரும் கட்சியாக உறுப்பினர்களைப் பெற்றுள்ளோம். ஆறு சபைகளில் அறுதிப்பெரும்பான்மையோடு வெற்றிபெற்றிருக்கிறோம். அந்தச் சபைகளில் தவிசாளர், உபதவிசாளரைத் தெரிவு செய்யும் பொறுப்பு கட்சிக்கு மட்டுமே இருக்கும். அந்தவகையில் இந்த 35 சபைகளுக்குமான தவிசாளர் உபதவிசாளர்களை நாங்கள் முன்னிறுத்துவோம்.

மற்றையகட்சிகள் இந்தப் பொதுவான கோட்பாட்டுக்கு இணங்கி நாம் முன்னிறுத்துகின்ற வேட்பாளர்களை ஆதரிக்கவேண்டும்என்று கேட்டுக்கொள்கிறோம்.

சில சபைகளில் விதிவிலக்கு எதுவும் இருந்தால் அது தொடர்பில் ஆராய்வோம்.

வவுனியாவில் எமது கட்சி பின்னடைந்துள்ளது என்று கூறுவது ஒரு மாயை. கடந்த தேர்தலில் எமது கட்சிக்குக் கிடைத்த வாக்குகளைவிட இந்தத் தேர்தலில் வவுனியாவில் கூடுதலான வாக்குகள் கிடைத்துள்ளன. அது பின்னடைவு அல்ல. திடீர் என்று வானைத் தொடமுடியாது - என்றார். (ச-110)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 11.05.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0536 |
| DLB | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| | Q | 1 4 7 0 7 7 |

| Super Ball DLB | திகதி | தினம் |
|---|---|---|
| | 11.05.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2802 | Y | 14 48 49 53 |

| சனிதா DLB | திகதி | தினம் |
|---|---|---|
| | 11.05.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| L | 01 63 65 80 | 4963 |

| SASIRI DLB | திகதி | தினம் |
|---|---|---|
| | 11.05.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் | |
| 0681 | 09 20 35 | |

| லக்ன ராசி | திகதி | தினம் |
|---|---|---|
| | 11.05.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| கும்பம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| DLB | 13 44 46 59 | 4514 |

| KAPRUKA DLB | | திகதி | தினம் |
|---|---|---|---|
| | | 11.05.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| M | 27 | 14 43 53 54 | 1978 |

| அத கோடிபதி DLB | திகதி | தினம் |
|---|---|---|
| | 11.05.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| X | 18 33 51 56 | 2628 |

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்

தமிழின அழிப்பு வாரம் மே - 18 முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல், நல்லூர் தியாக நினைவிடம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டது. இதன்பொழுது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச- 125)





# தமிழ்த்தேசியக் கட்சிகளின் ஆட்சி வடக்கு – கிழக்கில் மலரவேண்டும்!

## ரெலோ தெரிவிப்பு

வவுனியா, மே 12

வடக்கு- கிழக்கு எங்கும் பரந்துபட்ட அளவில் தமிழ்த்தேசியக் கட்சிகளின் ஆட்சி மலரவேண்டும். அதில் நாங்கள் உறுதியாக இருப்பதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோவின் தலைமைக் குழுக்கூட்டம் வவுனியாவில் நேற்றுமுன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே குருசாமி சுரேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சிசபைகளைப் பலப்படுத்துவது தொடர்பாக நாம் கலந்துரையாடியுள்ளோம். அந்தவகையில் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியூடாகத் தமிழ்த்தேசியக் கட்சிகளோடு இணைந்து சபைகளைப் பலப்படுத்துவதாக தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியக் கட்சிகளின் ஆட்சி மலரவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அந்த அடிப்படையில் தமிழ்த்தேசியக் கட்சிகளின் தலைவர்களோடு, ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் தலைவர்கள் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பதாக முடிவு எட்டப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாகத் தொடர்ந்து பயணிப்பது தொடர்பான முடிவுகள் எவையும் எடுக்கவில்லை. இனிவரும் காலங்களில் இவ்வாறான விடயங்கள் தொடர்பாக எமது தலைமைக்குழு கூடி ஆராயவுள்ளது- என்றார். (ச-110)

# கனடாவில் நினைவுத்தூபி மீளெழுச்சியின் வலிமை!

## ஹரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு

ரொறண்டோ, மே 12

கனடா பிரம்டனில் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி திறக்கப்பட்டுள்ளமை எங்கள் கூட்டு வரலாற்றில் முக்கியமான ஒரு தருணமாகும் என்று கனடாவின் நீதியமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இந்த நினைவுத்தூபி இலங்கையில் அரசாங்கத்தினால் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையின்போது கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்களின் நினைவுச்சின்னமாக விளங்குகின்றது. உலகெங்கிலுமுள்ள தமிழர்களின் வலிமை மற்றும் மீள் எழுச்சித் தன்மையை இது கௌரவிக்கின்றது. அவர்களின் அர்ப்பணிப்பே இந்த நினைவுத்தூபி உருவாகுவதற்கான காரணம். நாங்கள் தொடர்ந்தும் நீதிக்காகக் குரல்கொடுக்கும் அதேவேளை ஐக்கியப்பட்டவர்களாக வலிமையானவர்களாக விளங்குவோம் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

அரசியற்தலையீட்டால்

# பதவியிலிருந்து விலகினார் மின்சாரசபைத் தலைவர்?



கொழும்பு, மே 12

**இலங்கை மின்சார சபையின் தலைவர் திலக் சியம்பலாப்பிட்டிய பதவி விலகியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ள நிலையில், அரசாங்கம் அதை மறுத்துள்ளது.**

தனது பதவி விலகல் தொடர்பாக எரிசக்தி அமைச்சுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மின் கட்டணத் திருத்தம் மற்றும் அரசியல் தலையீடு காரணமாக பதவியில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்துக்கும் இலங்கைக்கும் இடையே எட்டப்பட்ட பணியாளர் ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் பெற மின்சார உற்பத்திச் செலவை மீட்டெடுக்கக் கூடிய மின் கட்டண முறைய அறிமுகப்படுத்துவது அவசியமாகும். அதனால் மின் கட்டணத்தை 25 முதல் 35 சதவீதம் வரை அதிகரிப்பது தொடர்பாக அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது. இதுதொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவரும் நிலையில் திலக் சியாம்பலாப்பிட்டியவின் பதவி விலகல் தொடர்பாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, திலக் சியம்பலாப்பிட்டியவின் பதவி விலகல் தகவல்களை அரசாங்கம் மறுத்துள்ளது. அவர் தனிப்பட்ட காரணங்களுக்காக வெளிநாடு செல்வதற்காக அவர் விடுமுறை பெற்றுள்ளார் என்று அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மின் கட்டணங்களைத் திருத்தக்கூடாது என்று மின்சார சபை தெரிவித்திருந்தபோதும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கடந்த ஜனவரி மாதம் மின் கட்டணத்தில் 20 சதவீதக் குறைப்பை மேற்கொண்டது. அதையடுத்து மீண்டும் மின்சார சபை நட்டத்தை எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளது என்று மின்சார சபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## நிரந்தரப் பாதசாரிக்கடவை அமைக்கப்படவேண்டும்

### ஜிப்பிரிக்கோ கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 12

வலி. தென்மேற்குப் பிரதேசபை எல்லைக்குட்பட்ட வலிகாமம் வலய பாடசாலையான பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்துக்கு அருகேயுள்ள சண்டிலிப்பாய் - பண்டத்தரிப்புப் பிரதான வீதிக்கருகே பாதசாரிக்கடவையொன்று அமைக்கப்பட வேண்டும் என்று மானிப்பாய் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் அ.ஜோன் ஜிப்பிரிக்கோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த பகுதியில் பாதசாரிக்கடவை இன்மையால் பாடசாலை மாணவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

ஆகவே இவ்வீதிக்குச் சொந்தமாகவுள்ள மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியன விரைந்து தலையிட்டு பாடசாலைக்கருகில் வீதியின் இருபுறமும் பாடசாலை இருப்பதற்கான அடையாளக் குறியீட்டுப் பதாகை அமைப்பதுடன் நிரந்தர பாதசாரிக்கடவையும் அமைக்கவேண்டும் - என்றார். (ச-27)

வெசாக்கை முன்னிட்டு

## 388 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அரசியலமைப்பினூடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய வெசாக் பண்டிகையை முன்னிட்டு 388 சிறைக்கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்படவுள்ளனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவர்களில் 4 பெண் சிறைக் கைதிகளும், 384 ஆண் சிறைக்கைதிகளும் உள்ளடங்குகின்றனர். வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து 40 கைதிகளும், வாரியப்பொல சிறைச்சாலையிலிருந்து 38 கைதிகளும், அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து 36 கைதிகளும், மஹர சிறைச்சாலையிலிருந்து 30 கைதிகளும் உள்ளடங்கலாக 388 கைதிகள் விடுதலைசெய்யப்படவுள்ளனர் என்றும் சிறைச்சாலைத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)



## வெசாக் வாரத்துக்கு சிறப்புப் பாதுகாப்பு

வெசாக் வாரத்துக்காக சிறப்புப் பாதுகாப்புத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவி பொலிஸ் கண்காணிப்பாளருமான பிரெட்ரிக் வூட்லர் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக சி.சி.ரி.வி. காட்சிகளை உன்னிப்பாகக் கண்காணிக்கக் குழுக்கள் நிறுத்தப்படுள்ளன. மேலும், பொதுமக்களின் பாதுகாப்பைஉறுதிசெய்வதற்காக சிவில்உடையில் பொலிஸ் அதிகாரிகள் நிறுத்தப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## மாணவனைத் தாக்கிய ஆசிரியருக்கு மறியல்

மாணவனைத் தாக்கிய குற்றச்சாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்ட ஆசிரியரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர். வட்டுக்கோட்டை சித்தங்கேணிப் பகுதியில் தனியார் கல்வி நிறுவனமொன்றில் வகுப்புக்கு வருகைதரும் மாணவன் ஒருவர் 'பட்டப் பெயர்' கூறி அழைத்ததாகத் தெரிவித்து மாணவரை ஆசிரியர் வகுப்புவேளையில் அடித்துத் தாக்கியுள்ளார். இந்தநிலையில் மாணவனின் பெற்றோர் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய ஆசிரியர் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன்போது கைதுசெய்யப்பட்ட தனியார் கல்வி நிலைய ஆசிரியரை எதிர்வரும் 14நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-125)




எங்கட ஆக்கள் ஒவ்வொரு எலக்சன் முடிஞ்சவுடனையும் நந்தவனத்து ஆண்டியளா மாறி, இவ்வளவு நாளும் சனம் கஷ்டப்பட்டு செய்த நல்லதையெல்லாம் பானைமாதிரி போட்டுடைக்கிறதே வேலையாப் போட்டுது. போனமுறை எங்கட தமிழ்க்கட்சியளுக்கு வோட் பண்ணாமல் பாடம் படிப்பிச்ச சனங்கள், இந்த முறை போனால் போகட்டுமெண்டு திரும்ப ஒரு சான்ஸ் குடுத்துப் பார்த்திருக்கினம். அதாலதான் இப்பிடி அவையளால வெல்லமுடிஞ்சது. ஆனால் சனம் என்னவோ நினைக்க, உந்தக் கட்சிக்காரர் வேற என்னவோ நினைக்கினம் போலதான் கிடக்குது. வெற்றி அவையின்ர கண்ணை மறைச்சு, மண்டையில திரும்பவும் மமதையை ஏத்த வைச்சுப்போட்டுது. அதால திரும்பவும் பழைய குருடி கதவைத் திறந்தமாதிரி, சனத்தின்ர ஆணைக்கு எதிராத் திமிர்த்தனமான வேலையெல்லாம் செய்யத்தொடங்கிட்டினம்.

35க்கும் மேற்பட்ட சபையளில ஆட்சியமைக்கிற சான்ஸ் வீட்டுக்கட்சிக்குக் கிடைச்சிருக்கு. ஆனாலும் பெரும்பாலான சபையளில அவையள் தனிய ஆட்சி அமைக்க ஏலாது. சங்கோ, சைக்கிளோ ஆதரவு குடுத்தால்தான் வீட்டுக்கட்சி, அந்தச் சபையளின்ர ஆட்சியைப் பிடிக்கமுடியும். அதுக்கான டீல் எல்லாம் இப்ப திரை மறைவில பேசிக்கொண்டு இருக்கினமாம். இதில என்ன பகிடி எண்டால், எல்லா அலுவலுக்கும் மத்தியகுழுவைக் கூட்டி முடிவெடுக்கிற வீட்டுக்கட்சி, சபையளில ஆரோட கூட்டணி அமைக்கிறது எண்டதை முடிவெடுக்கிறதுக்கு இன்னும் மத்தியகுழுவைக் கூட்டேலை. ஆனால் கட்சியின்ர பதில் பொதுச்செயலாளர் உள்ளுக்கால பேரம் பேசிக்கொண்டுதான் இருக்கிறார். வழக்கம்போல,அவரே பேசி, அவரே ஒரு முடிவை எடுத்து, அவரே மற்றக்கட்சிக்கு வாக்குறுதி எல்லாம் குடுத்துப்போட்டுத்தான் வீட்டுக் கட்சியின்ர மத்தியகுழுக்காரரைக் கூப்பிட்டு தன்ர முடிவை கட்சியின்ர முடிவா ஏற்கச்செய்து அறிவிப்பார் போல கிடக்குது.

இப்பிடிக் கூட்டணி பேரத்தை தனியா, கட்சியில வேற ஆக்களுக்குச் சொல்லாமல் செய்யிறமாதிரி, சபையளுக்குத் தவிசாளரா ஆர் வரோணும் எண்டதையும் பதில் பொதுச்செயலாளர்தான் முடிவுசெய்யப்போறாராம். அவர் தன்ர விசுவாசியளைத்தான் தலைவராப் போட நிக்கிறாராம். சில இடங்களில அதுக்கு எதிர்ப்பும் வந்திருக்குது. ஒரு சபையில முந்தித் தவிசாளரா இருந்த பிரகாசமா இருந்தவரைத் திரும்பவும் தவிசாளராப் போடோணும் எண்டு பதில் பொதுச்செயலாளரும், அவரின்ர ரீமும் நிக்கினம். அந்த சபையில் தவிசாளரின்ர கதிரையில பிரகாசமா இருந்தவரைப் பற்றி அவ்வளவு நல்ல அபிப்பிராயம் சனத்துக்கு இல்லை. அதோட போனவருசம் பார்லிமெண்ட் எலக்சனிலையும் நிண்டு படுதோல்வி அடைஞ்சவர். அதால அந்தச் சபையில உள்ள வீட்டுக்கட்சிக்கார உறுப்பினர்மார் சிலரும், வீட்டுக் கட்சியோட ஆட்சியமைக்க ஓமெண்டு சொன்ன கட்சியும் இன்னொருத்தரைத்தான் (அவர்தான் அந்த சபையில நேரடியா எலக்சன் கேட்ட வேட்பாளர்மாரில கூட வோட் வித்தியாசத்தில வெண்டிருக்கிறார்) தவிசாளராப் போட வேணும் எண்டு ஒற்றைக்காலில நிக்கினமாம். ஆனால் அப்பிடி அவரைத் தவிசாளராப் போடேலாது எண்டு கட்சியின்ர மேல்மட்டம் சொல்லுதாம். 'அவர் போன முறை வேற கட்சியில எலக்சன் கேட்டவர். அப்ப எப்பிடி அவரை தவிசாளரா போட முடியும்?'எண்டு சளாப்புகினம். ஆனால் போனமுறை வேறகட்சியில எலக்சன் கேட்டவரை உங்கட கட்சியில நிப்பாட்டலாம், அவரின்ர வாக்குகளை வைச்சு போனஸ் சீற் எடுக்கலாம். ஆனால் அவருக்குத் தவிசாளர் பதவி குடுக்கமாட்டமெண்டுறது எந்த வகையில நியாயம்? இப்பிடிச் சனம் நினைக்கிறதுக்கு மாறா நடந்தால் அடுத்த தேர்தலுக்கு இன்னும் ஒருக்கா சனம் இவைக்கு நல்லபாடம் படிப்பிப்பினை கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தையின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலுடன் செயற்படுவீர்கள். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். இளைய சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள்.

**இடபம்:** பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சகோதரர்களுடன் மனவருத்தம் ஏற்படக்கூடும். அனுசரித்துச்செல்வது நல்லது. பிள்ளைகளால் வீண்செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில்வாடிக்கையாளர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். உறவினர்கள்மூலம் சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். சிலருக்கு வீண் அலைச்சல் ஏற்படும் அதனால் உடல் அசதி உண்டாகும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வீட்டுப் பராமரிப்புப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர் மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும். தந்தையுடனும் தந்தைவழி உறவினர்களுடனும் தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் நீண்ட நாள்களாக நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்லசெய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். பிற்பகலுக்குமேல் மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. ஆனால், சிலருக்கு அதிகபடியான செலவுகளால் கடன்வாங்கநேரிடும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விஷயத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். ஆனால், நண்பர்கள் உங்கள் தேவையை அறிந்து செய்யும் உதவி ஆறுதல் தரும்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வெளியில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. கடன்களில் ஒரு பகுதியைத் தந்துமுடிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்குக் குடும்பம் தொடர்பான பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும். சிலருக்கு தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.



## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், மே 12

சுழிபுரம் மேற்கு பாரதி கலைமன்றத்தினரால், யாழ். மாவட்டத்தின் இரத்த வங்கியில் நிலவும் தட்டுப்பாட்டைத் தவிர்க்கும் முகமாக கலைமன்றத்தின் 43ஆவது ஆண்டினை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது. இரத்ததான முகாமில் சுழிபுரம் மேற்கு பாரதி கலைமன்றத்தின் இளைஞர்கள், யுவதிகள், தன்னார்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-125)



## திருமஞ்சத் திருவிழா

யாழ்ப்பாணம், மே 12

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ மகாகாளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு திருமஞ்சத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை நூற்றுக்கணக்கான அடியவர்கள் புடைசூழச் சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் இடம்பெற்றது. (ச-41-66)



## நினைவேந்தல்

வவுனியா, மே 12

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் ஸ்ரீ சபாரட்ணத்தின் 39 ஆவது நினைவு தினம் கட்சியின் ஏற்பாட்டில் வவுனியா மாநகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான கோவிந்தம் கருணாகரன், சிவசக்தி ஆனந்தன், வினோதரராதலிங்கம், ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி, வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், மதகுருமார், கட்சி உயர்பீட உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-41-110)

## முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடத்துக்கு ஆட்சேர்ப்பு

யாழ்ப்பாணம், மே 12

அரச திணைக்களங்களின் வெற்றிடமாகக் காணப்படும் முகாமைத்துவ உதவியாளர் தரம் 111க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்தபோட்டிப் பரீட்சை எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. பரீட்சைக்கான அனுமதி அட்டை பரீட்சைகள் திணைக்களப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ச-9)



மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் தமிழ்ப்பாட ஆசிரியையாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற திருமதி மாலதி கந்தையாவின் மணிவிழா நிகழ்வு ஆசிரியர் நலன்புரிச்சங்கத்தினால் அண்மையில் நடத்தப்பட்டது. அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் து. ஜெயதேவன் கலந்துகொண்டார். (ச-9)

## இரத்ததானமும் கண் பரிசோதனையும்

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணம் அளவெட்டி அளகொல்லை விநாயகர் ஆலயத்தில் அமரர் தியாகராஜா தயாளனின் நினைவுநாளை முன்னிட்டு இரத்ததானமும் இலவசக் கண்பரிசோதனையும் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை இடம்பெறும் என ஆலய தொண்டர்சபையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-63)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உணர்வெப்பத்தின் உச்ச தாண்டவம்

ஒரு பாலைவனத்துக்கு நிகரான வெம்மையை இலங்கை இப்போது உணரத் தலைப்பட்டிருக்கின்றது. இயற்கையின் இரக்கத்தால் ஆங்காங்கே மழை பொழிந்து, வெப்பச் சாவுகள் தவிர்க்கப்பட்டு வந்தாலும், ஒட்டுமொத்தமாக நோக்கின், மனித வாழ்வுக்கு ஒவ்வாத காலநிலையை இன்று நாங்கள் ஒவ்வொருநாளும் சந்தித்துவருகின்றோம்.

இலங்கையில் தற்போது நிலவும் வெப்பத்துடனான காலநிலை எதிர்வரும் நாள்களில் அதிகரிக்கும் என்றும், 38 பாகை செல்சியஸுக்கும் மேலான வெப்பநிலை நிலவும் என்றும் துறைசார் அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். எப்போதும் உணர்வெப்பநிலை எச்சரிக்கை எனப்படுவது, அறிவிக்கப்படும் வெப்ப அளவை அவ்வாறே உணருவது அல்ல. எனவே, 38 பாகை செல்சியஸ் வெப்பநிலை நிலவுமெனில், உண்மையில், 40 தொடக்கம் 43 வரையான செல்சியஸ் உணர் வெப்பநிலையை நாங்கள் எதிர்கொள்ளவேண்டியிருக்கும். வெப்பநிலையைப் பார்க்கிலும் உணர் வெப்பநிலை வீரியம் மிக்கது என்பதுடன் ஆபத்தானதாகவும் காணப்படுகின்றது. ஒரு தார் வீதியில் நாம் நடந்து செல்கின்றபோது சூரிய வெம்மையுடன் சேர்ந்தவாறாக தார் வீதியின் வெம்மையையும் உணரத் தலைப்படுகின்றோம். இதுவே வெப்பநிலைக்கும், உணர்வெப்பநிலைக்கும் இடையிலான வேறுபாடு.

வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும் சக்தி மனிதகுலத்திடம் இதுவரை வாய்க்கவில்லை. இது சூரியனுடன் நேரடித்தொடர்புடைய விடயம். பல மில்லியன் பழமை மிக்க வாழ்வியலில், இப்போதுதான் மனிதன் நிலவின் தென்துருவத்தில் கருவியைக் களமிறக்கியுள்ளான். ஆனால், மனிதகுலத்தைப் பெரிதும் வாட்டிவதைக்கும் உணர்வெப்பநிலையை எம்மால் மிகமிக இலகுவாகவே கட்டமைக்கவும், கட்டுப்படுத்தவும் முடியும். அதைக் கட்டுப்படுத்துவதும், கட்டறுக்கவைப்பதும் எம் கரங்களிலேயே தங்கியிருக்கின்றது. மனிதர்கள், உயிரினங்கள், வனங்கள், வனப்புகள் இவை அனைத்தும் இணைந்ததுதான் பூமி. இதில் ஒன்றில்லாமல் இன்னொன்றில்லை. இதைத்தான் உயிர்ப்பல்வகைமை என்கின்றோம். இந்த உயிர்ப்பல்வகைமை, ஒரு ரயில் தண்டவாளத்தின் இரு முனைகளைப் போன்று சமாந்தரமாகப் பேணப்படுவதிலேயே பூமியின் இருப்பும் எதிர்காலமும் தங்கியுள்ளன. ஆனால், இன்றோ மனிதனின் தேவைப்பாடுகள் மிதமிஞ்சி அதிகரிக்க அதிகரிக்க இதர உயிரினங்களினதும், வனப்புகளினதும், வனங்களினதும் செறிவும் எண்ணிக்கையும் குறைந்துகொண்டே செல்கின்றது. மரங்கள் வகை தொகையின்றி வெட்டிச் சரிக்கப்பட்டுவிட்டன. சிறு குளங்களாக இருந்த பகுதிகள் தற்போது வணிக வளாகங்களாக மாறிவிட்டன.

சூழலின் பல்வகைமைக்கும் சமநிலைக்கும் ஊறு விளைவிக்கும் அத்தனை செயற்பாடுகளும் -செயற்கையான மாற்றங்களும் எம் கண்ணெதிரே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. குளங்கள், ஆறுகளில் இருந்து தனக்குத் தேவையான நீரை எடுத்துக்கொண்ட இயற்கை, இப்போது எம் அடிப்படை நீராதாரக் கட்டமைப்புகளில் கைவைக்கத் தலைப்பட்டுள்ளது. ஆனால் இதிலிருந்து எம்மைத் தற்காத்துக்கொள்ள என்ன நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம் என்ற வினாவே இன்று பூதாகரமாக எஞ்சிநிற்கின்றது. வெப்பம் எம்மை வாட்டிவதைக்கக்கூடாதென்றால் உணர் வெப்பநிலையின் ஆபத்தம்சங்களை நாம் உணர்ந்து, அதைத் தடுப்பதற்கான காரியங்களைக் கைக்கொள்ளவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

ஈகையுள்ளம் கொண்டவனுக்குத் தைரியம் அவசியமில்லை. ஏனெனில் தாராளம் என்ற கை, தைரியம் என்ற கையைவிட வலிமையானது.

– தாகூர் –



# வாக்களிப்பதைத் தவிர்த்த 10 இலட்சம் வாக்காளர்கள்



கொழும்பு, மே 12

**கடந்த உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தலின்போது கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் இருந்து சுமார் 10 இலட்சம் பேர் வாக்களிக்கச் செல்லவில்லை என்று தெரியவந்துள்ளது.**

கொழும்பு மற்றும் புறநகர்ப் பிரதேசங்களில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுவருகின்றவர்களில் பெரும்பாலானவர்களே இவ்வாறு வாக்களிப்பைப் புறக்கணித்து கொழும்பில் தங்கியிருந்துள்ளனர்.

நடந்து முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல், அரசியல் மற்றும் தேர்தல் முறைமையின் மீது நம்பிக்கையின்மை, விரக்தி, வாக்களிப்பதற்காக தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வதற்கான செலவைத் தாங்கமுடியாமை, இந்தத் தேர்தல் தொடர்பில் போதிய அறிவின்மை போன்ற காரணங்களால் அவர்கள் வாக்களிக்கச் செல்லவில்லை என்று தெரியவருகின்றது. (ச-இ)

# முட்டை விலை சரிந்தது

கொழும்பு, மே 12

சந்தையில் முட்டையின் விலை குறைந்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, நாட்டின் பல பகுதிகளில் முட்டை 20 முதல் 24 ரூபா வரையில் விற்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் முட்டைகள் அதிக விலைக்கு விற்கப்பட்டா லும், அண்மைய நாள்களில் விலை 26 மற்றும் 28 ரூபாவாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# சிறைக்கைதிகளை சந்திக்க வாய்ப்பு

யாழ்ப்பாணம், மே 12

வெசாக் போயா தினத்தை முன்னிட்டு சிறைச்சாலைக் கைதிகளுக்கு பார்வையாளர்களைச் சந்திக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று மற்றும் நாளை ஆகிய இரு தினங்களும் இதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைதிகளின் உறவினர்களால் கொண்டுவரப்படும் உணவுப்பொதிகள், இனிப்புகள் மற்றும் சுகாதாரப் பொருள்கள் ஆகியவற்றை வழங்க ஏற்பாடுசெய்யப்படும் என்றும் சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# நிதிமோசடி நடிகை கைது

கொழும்பு, மே 12

பிரபல நடிகை சேமினி இத்தமல்கொட வெலிக்கட பொலிஸாரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நிதிமோசடி தொடர்பில் பிறப்பிக்கப்பட்ட 7 பிடியாணைகளின் பேரில் அவர் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



# பொல்லால் தாக்கி ஒருவர் கொலை!

கொழும்பு, மே 12

நாகொடை, கம்மெத்தேகொடப் பகுதியில் ஒருவர், பொல்லினால் தாக்கப்பட்டு நேற்றுமுன்தினம் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நாகொடை, கம்மத்தேகொடப் பிரதேசத்தைச் சேர்ந்த 83 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

விசாரணையில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பது தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை- சித்திரை 30
13.05.2025
சுபநேரம் : 10.24- 01.54
ராகுகாலம் : 02.54 - 04.24

# இலவச குத்தகை அடிப்படையில் வாழைச்செய்கைக்கு அரசகாணி

## புதுக்குடியிருப்பில் முன்மாதிரி நடவடிக்கை

**முல்லைத்தீவு, மே 12**

**தூய்மையான இலங்கை எனும் அரசின் கொள்கைக்கு அமைவாக புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட தேராவில் கிராமத்தில் மாகாண விவசாயத்திணைக்களத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள அரச காணியில், அரை ஏக்கர் வீதம் இலவச குத்தகை அடிப்படையில் 5 வருடங்களுக்கு, ஏற்றுமதிக்கான கேவண்டிஷ் இன வாழைச்செய்கையை மேற்கொள்வதற்காக வழங்கப்படவுள்ளன.**

இந்தச் செயற்பாட்டை புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகம் முன்னெடுத்துள்ளது. இதுதொடர்பில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் திட்டமானது இளைஞர் மற்றும் யுவதிகளை விவசாயத்தினை நோக்கி ஈர்த்தல், இளம் தொழில் முனைவோர்களை உருவாகுதல், வறுமையை ஒழித்தல் மற்றும் பயன்படுத்தப்படாமலுள்ள விவசாயக் காணிகளைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தல் போன்ற நோக்கங்களின் அடிப்படையிலேயே செயற்படுத்தப்படவுள்ளன . இந்தத் திட்டத்தில் இணைய விரும்பும் இளைஞர் யுவதிகள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட எந்தவொரு கிராம அலுவலர் காரியாலயத்திலும் விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் 14ம் திகதி புதன்கிழமை தொடக்கம் 28ஆம் திகதி புதன்கிழமை வரையுள்ள வேலை நாள்களில் பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்தத் திட்டத்துக்கு ஏற்படும் செலவில் 25 வீதத்தைப் பயனாளிகள் செலுத்தும் இயலுமையைக் கொண்டிருக்கவேண்டும். பயிர்செய்யும் தன்மை, சமூக நிலை, வயதெல்லை என்பவற்றின் அடிப்படையில் தேர்வுகள் இடம்பெறும். விண்ணப்பதாரிகள் அனைவருக்கும் தீர்மானம் மற்றும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் அனுப்பிவைக்கப்படும்.

பிரதேச செயலகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், மாகாண விவசாயத் திணைக்களம் மற்றும் பயனாளிகள் எனும் அடிப்படையில் நான்கு தரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். மேலும் வாழைச்செய்கைக்காக உருவாக்கப்பட்டுள்ள அல்லது உருவாக்கப்படும் விவசாயிகள் நிறுவனத்தில் அங்கத்தவராகச் சேர்க்கப்படுவார்கள்.

அத்துடன் பயனாளிகள் தாங்கள் உற்பத்திசெய்யும் கேவண்டிஷ் வாழை உற்பத்தியை ஒப்பந்தம் மூலம் ஏற்றுமதிக்காக கைச்சாத்திடும் நிறுவனத்துக்கே வழங்கவேண்டும். எக்காலத்திலும் குறித்த காணிகள் பயனாளிகளுக்குச் சொந்தமாகாது என்பதுடன் எதிர்காலத்தில் தேவையேற்படின் குத்தகைக் காலத்தினை நீடிப்பது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படும்- என்றார். (ச-25,41,27,19)



யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை ப்ரத்யங்கிரா அறக்கட்டளையால் ஐயன்குளம், பொன்நகர் மத்தி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் வசிப்போருக்கு மூன்று சக்கரநாற்காலிகள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. இந்த உதவிகள் கனடாவில் வசிக்கும் சுந்தரா குடும்பத்தாரின் நிதி அனுசரணையில் வழங்கப்பட்டன. (ச-41-63)



மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட துள்ளுக்குடியிருப்புப் பகுதியில் இலவசமாக கண் பரிசோதனை செய்யப்பட்டு, இலவச மூக்குக்கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். (ச-25)

## பொறுப்பேற்கவும்

யாழ்ப்பாணம், மே 12



யாழ். போதனா மருத்துவமனைக்கு கடந்த புதன்கிழமை மாலை 2 மணியளவில் 1990 அம்புலன்ஸ் மூலம் சுமார் 77 வயது மதிக்கத்தக்க முதியவர் தலைக்காயத்துடன் சேர்க்கப்பட்ட நிலையில் அவருக்கு அவசரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டுவருகின்றது.

முதியவர் தனது விவரங்களை முழுமையாகக் கூறமுடியாத நிலையிலுள்ளார். தனது பெயர் இராமநாதன் தவராசா எனவும் இடம் காரைநகர் எனவும் தான் ஒரு நீர்விநியோக முகாமையாளர் எனவும் கூறுகின்றார்.

இந்த நோயாளியின் உறவினர்களை யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் அலுவலகத்தில் தொடர்புகொண்டு பொறுப்பேற்குமாறு யாழ்.போதனா மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-41)

## நெடுந்தீவில் மின்தடை நோயாளர்கள் அவதி

யாழ்ப்பாணம், மே 12

நெடுந்தீவு பிரதேசத்தில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதனால் அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மருத்துவமனையில் சிகிச்சை பெறவரும் ஆஸ்துமா நோயாளர்கள் மின்தடையால் உரிய சிகிச்சை பெறமுடியவில்லை. இரவு வேளையில் கொண்டு வரப்படும் நோயாளர்களுக்கு ரோர்ச் வெளிச்சத்தில் சிகிச்சை வழங்கப்படுகின்றது.

மின்தடை தொடருமாயின் மருத்துவமனைக்கு கொண்டு வரப்படும் நோயாளர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பவேண்டிய நிலை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-9)



கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலத்துக்கு பழைய மாணவர் வி. விஸ்வேந்திரா என்பவரால் வித்தியாலய அதிபரிடம் மின்விசிறி ஒன்று அன்பளிப்பாகக் கையளிக்கப்பட்டது. (ச-25, 17)

## சேவைநலன் பாராட்டு

யாழ்ப்பாணம், மே.12

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வருடாந்த இடமாற்றம் மூலம் இடமாற்றம் பெற்றுச்சென்ற மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் இராமலிங்கம் சிவகரனுக்கான சேவைநலன் பாராட்டுவிழா கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் மாவட்டப் பதில் செயலர் ம .பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மாவட்டச் செயலக மேலதிக செயலர் (காணி) க. ஸ்ரீமோகனன், மாவட்டச் செயலகப் பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களால் வாழ்த்துரைகள் நிகழ்த்தப்பட்டன. வாழ்த்துரையைத் தொடர்ந்து சிவகரனுக்குப் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டு வாழ்த்துப் பாமாலை வழங்கப்பட்டது. (ச-22,66)





# தொழில்வாண்மை விருத்தியும் மன அழுத்த நிர்வகிப்பும் தாதியருக்கு அவசியம்!

பத்மராசா பத்மநிருபன்
Bsc in Nursign, Msc in H.M (Read)
தாதிய உத்தியோகத்தர் தரம் 1
போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம்.

**இன்று மே 12 ஆம் திகதி . சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

தாதியம் என்பது உலகளாவிய ரீதியில் பரந்துபட்ட அளவில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அத்தியாவசியமானதாகவும் காணப்படுகின்றது. தாதியமானது தற்காலத்தில் நெருக்கடி நிறைந்ததாகவும் போட்டிச்சூழல் மிக்கதாகவும் மாறியுள்ளது. ஏனெனில் தொழிற்கல்வி விருத்தி, தொழில்நுட்ப விருத்தி, அறிவு, மனப்பாங்கு விருத்தி என்பன போட்டி நிறைந்த சூழலை ஏற்படுத்துகின்றது. வேலைச்சுமை, அதிகரித்த பொறுப்புகள், சமூகத்தில் போதுமான கௌரவம் வழங்கப்படாமை, பெறப்பட்ட கல்வித் தரங்களுக்கு ஏற்ப சம்பள விகிதாசாரம் பேணப்படாமை என்பன தாதியரிடையே மன அழுத்தங்கள் ஏற்படக்க காரணங்களாகின்றன. இது உலகளாவிய ரீதியில் மட்டுமல்ல இலங்கையிலும் மேலோங்கிக் காணப்படுகின்றது. எனவேதான் தொழில் வாண்மை விருத்தியும் மனஅழுத்த நிர்வகிப்பும் தாதியத் தொழிலுக்கு அவசியமான திறனாகக் கருதப்படுகிறது.

சொந்த வாழ்க்கைக்கும் தொழில் ரீதியான வாழ்க்கைக்கும் இடையிலான இடைத்தொடர்புகளை பேணி வாழ்க்கை சமநிலையைப் பேணவேண்டும்.

ஏனெனில் தாதியாரது சேவைத்திறன் முற்றிலும் மாறுபட்டவை. பகல் கடமை, இரவுக் கடமை என சிக்கலான காலச்சூழலில் அவர்கள் பணிபுரிகின்றனர். இது மிகவும் உணர்ச்சிபூர்வமானதாகவும் இருக்கிறது. அதேநேரம் நீண்ட கடமை நேரம் காரணமாக, தமது தனிப்பட்ட கடமைகளை ஆற்றமுடியாமல் போதல் கடமைச் சுமை என்பன மனச்சோர்வையும் தொழில் திருப்தியில் அடைவு மட்டத்தை அடையமுடியாமல்போகும் தன்மையையும் ஏற்படுத்தும், ஆயினும் அவர்கள் சமநிலையைப் பேண வேண்டியது அத்தியாவசியமாகின்றது.

மனதுடமையை வளர்த்தல் என்பதும் தாதியர்களுக்கு மிக முக்கியமானதாகும் .

சவால்கள், துன்பங்கள், எதிர்ப்புகள் அல்லது அழுத்தங்களை எதிர்கொள்ளும் திறனே மனதுடமை. இது எமது பிறப்பில் வருவதில்லை. இது ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்கும்போது நாம் அதற்கு எதிராகச் செய்கின்ற எதிர்வினை மூலம் கற்றுக் கொள்கின்ற விடயமாகும். பயிற்சியின் மூலமே இது வளர்த்துக்கொள்ளப்படுகின்றது.

தாதியத் தொழிலானது உயிருடன் போராடுகின்ற உணர்ச்சிபூர்வமான சேவையாகும். எமது மனதையும் பாதிக்கக் கூடிய பாவ புண்ணிய விளைவுகளுக்கு இடையேயான இறையாசியுடன் கூடிய சேவையாகும். இது இறைவனின் அழைப்பினாலேயே கிடைக்கப்பெறுவதாக முன்னோர்கள் குறிப்பிட்டுள்ளனர். தாதியர்களது கடின உழைப்பு, அதிகமான பொறுப்பு என்பன மனஅழுத்தத்தை ஏற்படுத்துகின்றன இது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். இந்த அழுத்தம் நீண்ட காலம் தொடருமாயின் உடல் ஆரோக்கியத்திற்கு மன ஆரோக்கியத்திற்கும் கேடு விளைவிக்கும். சரியான மன அழுத்த முகாமைத்துவம், சிறந்த தொழில்வாண்மை என்பன வினைத்திறனான தொழில் விருத்தியை ஏற்படுத்துகின்றன. மனஅழுத்தத்தை உடல் பராமரிப்பு, உணர்ச்சி பராமரிப்பு, மன அமைதி பராமரிப்பு ,நேரமேலாண்மை தொழில்நுட்ப உதவி பெறுதல் போன்ற விடயங்கள் மூலம் குறைத்துக்கொள்ளலாம்.

எமக்கு ஏற்படுகின்ற உணர்ச்சி வெளிப்பாடுகளைக் கட்டுப்படுத்துவது உடனடியாக நன்மை தரலாம். ஆனால் நீண்ட காலத்தில் உள ரீதியாக மற்றும் உடல் ரீதியாக முடிவுகளை எடுக்கும் திறன் பாதிப்புகளை ஏற்படுத்தும். எமது உணர்ச்சிப் பெருக்கை கலையம்சங்களுடன் வெளிப்படுத்தலாம். தியானம், சமய ஸ்தானங்களுக்குச் செல்லுதல், சுற்றுலா செல்லுதல் போன்றன மூலம் உணர்ச்சி வெளிப்பாடுகளைப் பராமரிக்கலாம்.

தனிப்பட்ட ரீதியில் மட்டுமின்றி நிறுவன ரீதியாகவும் நிர்வாகம் தகுந்த ஆதரவுகளை வழங்கி ஊழியர் நலன்சார் விடயங்களில் கவனஞ்செலுத்துதல் வேண்டும். ஊழியர்களுக்கான சேவை நலன் பாராட்டுகள், அடைவுமட்ட விருத்தியை தட்டிக்கொடுத்தல் போன்றன உத்தியோகத்தர்களின் வினைத்திறனை அதிகரிக்கும்.

இவ்வாறு தாதியர்கள் மனதளவிலும், உடல் ரீதியாகவும் உற்சாகமான நிலையை அடைந்து, பணிச்சூழலும் அவர்களோடு ஒத்திசைவாக இருந்தால், நோயாளர்களின் நோய்கள்கூட பறந்தோடுமளவுக்கு அவர்களது பணி சிறக்கும் என்பதை அனைவரும் மனதிற்கொள்வதும் அவசியம்.

# கர்மவினைகளைப் போக்கும் சித்திராப் பௌர்ணமி



மதுரைகவி காரை எம்.பி.அருளானந்தம்

கர்மவினைகளைப் போக்கும் சித்திரைப் பௌர்ணமி தினத்தன்று நம் முன்னோர்கள் மற்றும் தெய்வங்களுக்கு விரதம் இருந்து வழிபாடுசெய்வது மிகவும் சிறப்பானது.

சித்திரை மாதத்துப் பௌர்ணமியும் சித்திரை நட்சத்திரமும் சேர்ந்துவரும் நாள் சித்திர குப்த விரத நாளாகும். காமதேனுவின் மகனும், இந்திரன் இந்திராணியின் வளர்ப்பு மகனுமாகக் கருதப்படும் சித்திர புத்திரர், எமதர்மராஜனது கணக்குப் பிள்ளையாக இருப்பவர். எமது புண்ணிய பாவங்களின் விபரங்களையும் எமது ஆயுள் கணக்கையும் எழுதிவைத்து அவற்றை எமதர்மராஜனுக்கு ஒப்புவிப்பதுதான் அவரது வேலை என்பது புராண ஐதீகம். சித்திராப் பௌர்ணமி அன்று பூஜைகள் செய்து சித்திர குப்தரை வணங்குவதன் மூலம் சர்வ பாவங்களும் நீங்கும். சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும்.

## சித்திரகுப்தர் தோன்றிய இதிகாச வரலாறு

ஒரு தடவை பூலோகம் சிருஷ்டிக்கும் முன்னர் யார் யாருக்கு என்னென்ன பணிகள் தருவது என்று ஆராயப்பட்டது. அந்தவகையில் எமதர்ம ராஜனுக்குத் தண்டனை கொடுக்கும் தொழில் வழங்கப்பட்டது. எமதர்மருக்குத் தனியாக அந்தத் தொழிலைச் செய்வது கடினமாக இருப்பதாகவும் இதற்கு ஒரு வழி கூறும்படியும் பிரம்மனிடம் வேண்டினார். பிரம்மனும் சிவபெருமானிடம் இதைப்பற்றி எடுத்துக்கூறியதை அடுத்து எமனுக்கு உதவியாக ஒருவரை நியமிக்கும் பொறுப்பு சிவபெருமானுக்கு ஏற்பட்டது. விநாயகரை அனுப்பிவைக்கலாமெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அப்போதுதான் அவர் பாரதத்தை எழுதிமுடித்திருந்தார். முருகனோ முன் கோபக்காரன். எனவே என்ன செய்வதென சிவபெருமான் யோசித்தார். உமாதேவியிடம் பொற்பலகையும், வர்ணங்கள் மற்றும் தூரிகையும் கொண்டுவரச்சொன்னார். பின் பச்சை, நீலம், மஞ்சள், வெள்ளை, சிவப்பு போன்ற நிறங்களைக் கொண்டு தன்னைப்போல ஓர் அழகிய உருவம் வரைந்தார்.

பார்வதிதேவியைப் பார்த்து சித்திரம் எப்படி இருக்கிறது? என்றார். அதற்கு பார்வதிதேவி, சித்திரம் அழகாகத்தான் இருக்கிறது. வலது கையில் தங்க எழுத்தாணி, இடது கையில் ஓலைச்சுவடி இவற்றுடன் என்ன செய்யப்போகிறான் உங்களது சித்திர புத்திரன்? என்றார். சிவபெருமான் வரைந்து வைத்த சித்திரத்தின் மேல் ஊத பொற்பலகையில் இருந்து வெளிவந்த புதல்வன் உலக மாதா பிதாவாகிய பார்வதி பரமேஸ்வரரின் காலில் விழுந்து வணங்கி நின்றார். சிவபெருமான், சித்திரப்புதல்வனை அருகில் அழைத்து விபூதியிட்டு அவரது காதில் சித்திரகுப்தன் என்ற நாமத்தை கூறினார். மற்றவர்களுக்குக் கஸ்டமாகத்தெரியும் கணக்குகள்கூட உனக்குச் சுலபமாக வரும். சிரஞ்சீவியாய் இருந்து எப்போதும் ஜீவராசிகளின் பாவ, புண்ணியக் கணக்குகளை எழுதிக்கொண்டிருப்பாயாக என ஆசீர்வதித்தார்.

## வழிபடும் முறை

சித்திராப் பௌர்ணமி சித்தர்களுக்கு மிகமிக உகந்த நாள். இப்போது சொல்லக்கூடிய சிவ மந்திரம், “ஓம் சிங் ராங் அங் சிங் சர்வ சித்தர்களே போற்றி! ஓம் சிங் ராங் அங் சிங் சர்வ சித்தர்களே போற்றி” என்பதை சில நிமிடங்கள் உச்சரித்து விளக்கேற்றி வழிபடலாம். நமச்சிவாய மந்திரத்தை உச்சரிக்கலாம். தியானம் செய்யலாம். சித்திரா பௌர்ணமி அன்று பெண்கள் விரதமுறையை மேற்கொள்கின்றனர். அன்று அதிகாலை எழுந்து நீராடி வாசலில் தெற்குத் திசையில் வாயில் போன்ற அமைப்பில் படிக்கோலம் இடுகின்றனர். பூஜையறையில் மாவினால் சித்ரகுப்தரின் உருவத்தினை வரைந்து ஏடு மற்றும் எழுத்தாணியை (பேப்பர் மற்றும் பேனா) உருவத்தின் அருகே வைக்கின்றனர். சர்க்கரைப் பொங்கல் மற்றும் பருப்புப் பாயாசம் (பால் சேர்க்காமல்) படைத்து விளக்கேற்றி தீப ஆராதனை காண்பிக்கின்றனர்.பின்னர் தங்கள் வாழ்வில் செய்த பாவங்களைப் போக்குமாறும் இனிவரும் நாளில் பாவங்கள் செய்யாமல் இருக்க அருள் புரியுமாறும் வேண்டுகின்றனர்.

## மரண அறிவித்தல்

மலர்வு
05 . 09 . 1972



இறப்பு
10 . 05 . 2025

### கிரிதரன் தேன்மொழி

(ஆசிரியர், திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை)

**புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், ஆடியபாதம், திருநெல்வேலியை நிரந்தரவசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. தேன்மொழி கிரிதரன் 10.05.2025 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்ற மருதப்பு கிருஷ்ணன், நாகபூசணி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சற்குணதேவியின் அன்பு மருமகளும், கிரிதரன் (கணக்காளர், கோப்பாய் பிரதேச செயலகம்) அவர்களின் அன்பு மனைவியும், அனுசாகர் (IT - மொரட்டுவ பல்கலைக்கழகம்), சைந்தவி (யா/வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற பகீரதன் மற்றும் Dr. ஸ்ரீபாஸ்கரன் (இரத்தவங்கி தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச்சகோதரியும், முகுந்தன் (ஜேர்மனி), கோகுலன் (ஜேர்மனி), Dr. யதர்சினி (யாழ் போதனா வைத்தியசாலை, பல் வைத்திய பிரிவு) ஆகியோரின் மைத்துனியும், சிவாஜினி (ஜேர்மனி), அமிர்தினி (ஜேர்மனி) ஆகியோரின் உடன்பிறவாச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2025) திங்கட்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**165/1 , ஆடியபாதம் வீதி**
**திருநெல்வேலி**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 033 2647**

(CS 58220 E-1)

## 1ம் ஆண்டு வீட்டுக்கிருத்திய அழைப்பு



**கடந்த 24.04.2024 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது அன்புத்தெய்வம்**

### அமரர் சிவபாக்கியம் நாகராசா

அவர்களின் 1ம் ஆண்டு நினைவுநாள் வீட்டுப்பிரார்த்தனை இன்று (12.05.2025) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சரசாலை வடக்கு,**
**சாவகச்சேரி.**

**பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**

(CR 44982) E-1

# வாந்தி எடுத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 12

குடும்பஸ்தர் ஒருவர் வாந்தி எடுத்துத் திடீரென உயிரிழந்துள்ளார். நீர்வேலியைச் சேர்ந்த கு.குணாதரன் (வயது 41) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் கோப்பாய் மருத்துவமனையில் சிற்றூழியராகக் கடமையாற்றுபவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அவர் வாந்தி எடுத்த நிலையில் உறவினர்கள் அவரைக் கோப்பாய் மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர். ஆயினும் அவர் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

இதய நோய் காரணமாக மரணம் சம்பவித்துள்ளது என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-26)

## வேலை வாய்ப்பு

முச்சக்கர வண்டி ஓட்டுநருக்கான அனுமதிப்பத்திரம் உள்ள ஆண் பெண் இருபாலாருக்குமான உடனடி வேலைவாய்ப்பு (முழுநேரம்) ஆர்வமுள்ளவர்கள் தங்கள் விபரங்களை Whats App ஊடாக பதிவிடவும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்

Whatsapp
**077 497 2920, 074 267 8654**

## மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 04 . 1967



மறைவு
09 . 05 . 2025

### சங்கரப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராஜா

V.C லேன், கொல்லங்கலட்டி, தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் இணுவில், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராஜா லண்டனில் (09.05.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, அன்னலட்சுமி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான வேலும் மயிலும் (ஓய்வு பெற்ற கிராமசேவையாளர்), மங்களேஸ்வரி தம்பதியினரின் மருமகனும், சிவாயினியின் (முன்னாள் ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி, யா/மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயம்) அன்புக்கணவரும், மிகுந்தனின் (மாணவன்.யா/கொக்குவில் இ.ஆ.பா) அன்புத்தந்தையாரும் செல்வமலர், தவமலர் (UK), சுகிர்தமலர், சிவராஜா, பத்மராஜா (ஆசிரியர், யா/ மல்லாகம் மா.வி), கிருஷ்ணராஜா(உடுவில் பிரதேச செயலகம்), ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற ஜெயா மற்றும் கிருபாகரன் (UK), யோகவல்லி (ஆசிரியர், நடேஸ்வராக் கல்லூரி), கந்ததர்ஷினி (ஆசிரியர், பிரான்பற்று கலைமகள்.வி), லோகேஸ்வரன், லதாவாணி (ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி), சிவலோஜினி (ஆசிரியஆலோசகர், வலிகாமவலயம்), வதனி (ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜீவசியாமினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கல்வி அமைச்சு, வ.ம), இளங்கோ (பிரதி கல்விப்பணிப்பாளர், தீவக வலயம்) கமலராஜன் (வலயக்கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி வலயம்), காலஞ்சென்ற Dr.ரகுபதி (பொதுவைத்தியநிபுணர், தெல்லிப்பளை) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

**இணுவில்** (CR 58222 ) E-1 **ச.கிருஷ்ணராஜா : 077 678 6952**

# 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 . 05 . 1976

உதிர்வு 03 . 05 . 2015



**அமரர் தியாகராசா சசிக்குமார்**

**திதி: 12.05.2025**

ஆண்டு பத்து கடந்தாலும்
அழியாது உங்கள் திருவுருவம்
எம் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
நம் கண்ணில் ஒளியாய் என்றும் இருப்பாய்
மீளாத் துயில் கொண்டு எம்மை எல்லாம்
ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்ற எம் பாசமிகு
குலவிளக்கே
கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி
உன்பாதம் துதிக்கின்றோம்.

அப்பா (தியாகராசா), அம்மா (புஸ்பராணி)
தம்பிமார்கள் (மதனமோகன், பிரதீபன், ஜெயரூபன்)
தங்கைகள் (சுஜாத்தா, சியாமளா)
மச்சாள்கள் (சுதர்ஷினி, துளசி, கலையரசி)
மச்சான்கள் (கரன், யசிகரன்)
பெரியப்பா (டிசாந், யனுசியன், சசித், சரண், சயன்)
மருமகன் (அக்ஷயன், அவந்தியன்)
மருமகள் (தூபிகா)

குடும்பத்தினர்

# மாகாணசபைத் தேர்தலை விரைவில் அரசு நடத்தாது

## மஹிந்த தெரிவிப்பு

அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை வெகுவிரைவில் நடத்தும் என்று எதிர்பார்க்கமுடியாது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகள் அரசாங்கத்துக்கு எதிர்மறையானதாக உள்ளதால் பிறிதொரு தேர்தலை நடத்தும் தீர்மானத்தை அரசாங்கம் தற்போது எடுக்காது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இந்த அரசாங்கம் உரிய தீர்வினை பெற்றுக்கொடுக்கவில்லை. தேசிய பாதுகாப்பு முழுமையாக பலவீனமடைந்துள்ளது.

கடந்த 7 மாத காலத்துக்குள் 79 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் 52 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிடுவது வேடிக்கையாகவுள்ளது.

அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளை சுட்டிக்காட்டும் பலமான எதிரணியாக நாம் செயற்படவேண்டும் - என்றார். (ச-இ)

# கதிரேசன் மடத்தில் சித்திரை கஞ்சி

யாழ்ப்பாணம், மே 12

சித்திரா பௌர்ணமியை முன்னிட்டு, கீரிமலை நகுலேஸ்வரத்தில் உள்ள கதிரேசன் மடத்தில் சித்திரைக் கஞ்சி வழங்கப்படவுள்ளது என்று நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அறிவித்துள்ளனர். (எ-இ)

# 10 ஆவது மாடியிலிருந்து வீழ்ந்தவர் உயிரிழப்பு

வெள்ளவத்தைப் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட சார்லிமன் வீதி பகுதியில் அமைந்துள்ள பத்து மாடிக் கட்டடத்தில் இருந்து கீழே விழுந்து ஒருவர் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மொரட்டுவெல்லப் பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவராவார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)



# ஹெலிகொப்டர் விபத்து விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, மே 12

மாதுரு ஓயாவில் பெல்-212 ரக விமானம் விபத்திற்குள்ளானமைக்கான உறுதியான காரணம், விசாரணைக்குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் வெளிப்படுத்தப்படும் என பாதுகாப்புப் பிரதியமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக விமானப்படைத் தளபதியின் அறிவுறுத்தலின் பேரில் 9 பேர் கொண்ட விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான பெல் 212 ரக விமானம் மாதுரு ஓயா வில் வீழ்ந்து விபத்திற்குள்ளானதில் விமானப்படை மற்றும் இராணுவ வீரர்கள் 6 பேர் உயிரிழந்தனர் என்றும் அவர் தெரிவித்தார். இதேவேளை மாதுரு ஓயாவில் வீழ்ந்த குறித்த ஹெலிகொப்ரர் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது. (ச-இ)

# அனலைதீவு மருத்துவமனையில் மருத்துவச் சிகிச்சை முகாம்





யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கனடா அனலைதீவு ஒன்றியம், யாழ்.பிராந்தியக் கடற்படைத் தலைமையகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அனலைதீவு பிரதேச மருத்துவமனையில் சிறப்புப் பல்துறைசார் மருத்துவச் சிகிச்சை முகாம் இடம்பெற்றது.

இதில் நூற்றுக்கணகானவர்கள் கலந்துகொண்டுதங்கள் நோய்நிலைமைகளுக்கான சிகிச்சை களையும், தொடர்ந்து மேலதிக சிகிச்சைகளைப் பெறுவதற்கான வழிமுறைகளையும் பெற்றனர். (ச-66)

## ரயிலுடன்...

பளை, தம்பகாமத்தைச் சேர்ந்த அருளானந்தம் பிரபாகரன் (வயது-43) என்பவரே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர் தண்டவாளத்தைக் கடக்க முயன்றபோது, யாழ்ப்பாணத்தில் இருந்து பயணித்த யாழ்ராணி ரயிலுடன் மோதி இந்த விபத்து நடந்துள்ளது. விபத்தில் சிக்கியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகள் பளை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ-எ-131-113-9)

## சங்குக்கூட்டணி ...

வடக்கு, கிழக்கில் தமிழ்க் கட்சியே ஆட்சியமைக்க வேண்டும் என்ற அடிப்படையில், வடக்கு கிழக்கில் அதிக ஆசனங்களைப் பெற்றிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு வழங்குவதே எமது நிலைப்பாடு என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் (சங்குக்கூட்டணி) இணைத்தலைவர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத்தலைமைகளுக்கு இடையே நடந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு, கிழக்கில் தமிழ்க் கட்சியே ஆட்சியமைக்க வேண்டும். இலங்கைத் தமிழரசுக் கட்சி பல இடங்களில் அதிக ஆசனங்களைப் பெற்று முன்னிலையில் உள்ளது. சில இடங்களில் ஏனைய சில கட்சிகளும் முன்னிலை பெற்றுள்ளன. நாம் அவ்வாறான கட்சிகளுக்கும் ஆதரவு வழங்க முடிவெடுத்துள்ளோம். எவ்வாறு ஆட்சியமைக்கமுடியும் என்பது தொடர்பில் ஆலோசித்துள்ளோம். நாம் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு வழங்குகின்றபோது, அவர்களும் சில சபைகளில் எமக்கு ஆதரவு வழங்கவேண்டும். எம்மிடம் 108 ஆசனங்கள் உள்ளன. ஏனைய கட்சிகளும் எம்முடன் சில விட்டுக்கொடுப்புகளைச் செய்யவேண்டும். அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் எம்முடன் பேசியது. கொள்கை ரீதியாக அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகத்தான் பயணிக்கின்றன. சமஷ்டியே அனைத்துக் கட்சிகளின் தீர்வாகவும் உள்ளது. ஆனால் வேறு காரணங்களுக்காகச் சிலர் விலகிச் சென்றால் நாம் எதுவும் செய்யமுடியாது. வடக்கில் சில சபைகளைக் கைப்பற்ற ஜே.வி.பி. கடுமையாக முயற்சிசெய்கின்றது. அதற்கு இடமளிக்க முடியாது - என்றார். (அ-எ-125)

## இனவழிப்பு...

கனடா, பிரம்டன் நகரில் "தமிழர் இனவழிப்பு நினைவுத் தூபி" உத்தியோகபூர்வமாகத் திறக்கப்பட்டுள்ளது.

கனடாவின் புகழ் பூத்த பூங்காவான செங்கூசி பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள "தமிழர் இனவழிப்பு நினைவுத் தூபி" திறப்புவிழாவில் கனடாவைச் சேர்ந்த அரசியல்வாதிகள் உட்படப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

இனப் படுகொலைக்குக்குள்ளானவர்களை நினைவுகூரும் வகையில் அகவிளக்கேற்றலுடன் நினைவுத்தூபி திறப்பு விழா நிகழ்வுகள் ஆரம்பமாகின. கனடாவின் அரசியல் வாதிகள் உட்படப் பலர் இணைந்து நாடாவெட்டி நினைவுத் தூபியைத் திறந்துவைத்தனர்.

இந்த நினைவுத் தூபி அமைக்கப்படுவதற்கு இலங்கை கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்திருந்தது. இனப்படுகொலை நினைவுச் சின்னம் என்று பெயரிடுவதால் இலங்கையின் நல்லிணக்கச் செயல்முறை சிதையும் என்றும், இவ்வாறான நினைவுச் சின்னத்தை அமைக்கக்கூடாது என்றும் அழுத்தங்களைப் பிரயோகித்திருந்தது.

ஆயினும் நினைவுத் தூபி திட்டமிட்டவாறு அமைக்கப்பட்டு தற்போது உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)



யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோவில்) ஆலய தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக் கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-41)



## முதல் நன்மைத் திருப்பலி

யாழ்ப்பாணம், மே 12

யாழ். வடமராட்சிக் கிழக்கு செம்பியன்பற்று வடக்கு சென். பிலிப் நேரிஸ் ஆலய வருடாந்த முதல் நன்மைத் திருப்பலி மற்றும் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆலயத்தில் இடம்பெற்றன. வணபிதா ஜே.ரெஜிநோல்ட் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் செம்பியன் பற்றுப் பங்குத் தந்தை ஜஸ்டின், அருட்சகோதரிகள், பங்குமக்கள், முதல் நன்மை பெற்ற சிறுவர்களுக்குக் கல்விகற்பித்துக்கொடுத்த மறையாசிரியர்களான ஆசிரியர் சாந்தா மற்றும் அனற்ஜெனிலா எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-27)

# வலிகள் சுமந்த வாரத்தை அனுஷ்டிக்கத் தயாராகுங்கள்

## வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கம் கோரிக்கை

**மட்டக்களப்பு, மே 12**

**இலங்கை அரசின் இன அழிப்பு நாள் மே 18 அதை எம்மால் ஒருபோதும் மறந்துவிடமுடியாது. அதனை முன்னிட்டு இன்று 12 ஆம் திகதி தொடக்கம் 18 திகதி வரை இன அழிப்பு வாரத்தை முன்னெடுப்பதற்கு வடகிழக்கிலுள்ள பல்கலைக் கழக மாணவர்கள், தமிழ்த் தேசியப் பற்றாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் அனைவரும் அணிதிரளவேண்டும் என்று வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி திருமதி அ.அமலநாயகி தெரிவிக்கையில்,

தமிழர்மீது இனஅழிப்பு நடத்தப்பட்டு 16 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் எங்களுக்கு நடந்த இன அழிப்புக்கான எந்த நீதியும் கிடைக்கவில்லை.

இறுதிப்போரின்போது பொருளாதாரத் தடையை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்தியது. அதன் காரணமாக சாப்பிட உணவில்லாமலும், குடிக்க நீர் இல்லாமலும், உப்பில்லாக் கஞ்சியருந்தி உயிர்வாழ்ந்தவர்களையும் அதுவும் கிடைக்காமல் பட்டினிச்சாவை எதிர்கொண்டவர்களையும் இந்த மே 18ஆம் திகதி பேரழிவு நாள் ஏற்படுத்தியிருந்தது. இதனை நினைவுகூறும் வகையில் இன்று 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரையான இன அழிப்பு வாரத்தில் இளைய சந்ததிக்கு இனஅழிப்புத் தொடர்பான விடயங்களைக் கொண்டு செல்லும் வகையிலும் எமது உள்ளக்குமுறல்களை சர்வதேசம் வரையில் கொண்டுசெல்லும் வகையிலும் உப்பில்லாக் கஞ்சியை வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்து வருகின்றோம். மே 18 ஆம் திகதி அனைத்து மக்களும் ஒன்றுதிரண்டு பெரும் எழுச்சியை ஏற்படுத்தி சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டாக அனைவரும் முன்வர வேண்டும். தேசியத்திற்காக பயணிப்போர் உள்ளிட்ட அனைவரும் முன்வரவேண்டும். 16 வருடங்களாக இந்த நாட்டில் ஒவ்வொரு அரச உருவாக்கம் நடைபெறுகின்றபோதிலும் ஒவ்வொரு ஜனாதிபதியும் எங்களை ஏமாற்றியே சென்றார்கள். எங்களுக்கு இலங்கைக்குள் எந்த நீதியும் கிடைக்கப்போவதில்லை என்பதை நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம்கூட ஒரு கண்துடைப்பு நாடகத்தையே அரங்கேற்றியிருக்கிறது. நாங்கள் காணாமற் போனவர்கள் பற்றி பல்வேறு தகவல்களை வழங்கியபோதிலும் அவர்கள் அது தொடர்பில் எந்த விசாரணையும்முன்னெடுக்கவில்லை. எனவே இந்த இன அழிப்புக்கு சர்வதேசமே தீர்வுதரவேண்டும். அதற்காகவே நாங்கள் 16 வருடங்களாக கண்ணீரோடு காத்திருக்கின்றோம்-என்றார். (ச-41-125)

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 05 . 09 . 1972



இறப்பு 10 . 05 . 2025

## திருமதி கிரிதரன் தேன்மொழி

(ஆசிரியர், திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை)

எமது பாடசாலை ஆசிரியை திருமதி தேன்மொழி கிரிதரன் அவர்கள் நேற்று முன்தினம் (10.05.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னாரின் இழப்பு எமது பாடசாலைச் சமூகத்தினருக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திப்பதுடன் அவரின் உறவுகளுக்கும் இறைவன் அமைதியைக் கொடுக்க வேண்டும் எனப்பிரார்த்திக்கின்றோம்

சாந்தி ! சாந்தி ! சாந்தி !

**பாடசாலைச் சமூகம்**

**யா/ திருநெல்வேலி றோ.க.தக. பாடசாலை.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 09 . 1956



மறைவு 10 . 05 . 2025

## திருமதி தேவராசா செல்வராணி

**(ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியை)**

மலேசியா நாட்டினைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் கிழக்கு சுழிபுரத்தினை வதிவிடமாகவும் கொண்ட அமரர் திருமதி தேவராசா-செல்வராணி (ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியை யா/சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி) 10.05.2025 சனிக்கிழமை இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்-தனலட்சுமியின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற முருகேசு-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முருகேசு-தேவராசாவின் (முன்னை நாள் பொலிஸ் உத்தியோகத்தர்) பாசமிகு மனைவியும், பிருந்தா (சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்-பிரதேச செயலகம் காரைநகர்), பிரியங்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு அன்னையும் சீ.இந்திரகுமார் (சிறைச்சாலை அத்தியட்சகர் யாழ்ப்பாணம்), பூ.தணிகைக்குமரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், நடராசா (மலேசியா), அமரர் மகேஸ்வரி, அமரர் செல்வசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆகாஷ், அபூர்வன், தாரிக்கா, தஸ்வின், தாமிரன் ஆகியோரின் பாசமிகு அம்மாம்மாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (13.05.2025) செவ்வாய்க்கிழமை மு.ப 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: **குடும்பத்தினர்.**

**021 225 0550, 077 869 7612**

(CS 315) V-1

## மீண்டும்...

தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஆனையிறவில் உற்பத்தி செய்யப்பட்ட உப்பு கடந்த காலங்களில் “ரஜ” என்ற பெயரில் விநியோகிக்கப்பட்டது. இது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த நிலையில், ஆனையிறவில் உற்பத்தி செய்யப்படும் உப்பின் பெயர் மாற்றப்படும் என்று கூறியிருந்தோம்.
தற்போது பெயர் மாற்றப்பட்டு “ஆனையிறவு உப்பு” என்ற பெயரிலேயே ஆனையிறவில் உற்பத்தி செய்யப்படும் உப்பு விநியோகிக்கப்படவுள்ளது.
அதேவேளை, உப்பின் விலை அதிரித்துள்ளதால் மக்கள் அசௌகரியங்களைச் சந்தித்துள்ளனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி உப்பின் விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (அ-எ-26-125)

## இ.போ.ச. பஸ்...

நுவரெலியா - கண்டி பிரதான வீதியில் கொத்மலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறம்பொடை, கெரண்டியெல்ல பிரதேசத்தில் இந்த விபத்து நடந்துள்ளது.
கதிர்காமத்தில் இருந்து நுவரெலியா வழியாக குருநாகல் நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸே விபத்துக்குள்ளாகியுள்ளது. கட்டுப்பாட்டை இழந்த பஸ் 100 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.
விபத்தை அடுத்துக் கடும் சிரமத்தின் மத்தியில் மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பஸ் விபத்தில் சிக்கியபோது பஸ்ஸில் சுமார் 75 பயணிகள் இருந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
விபத்தில் காயமடைந்தவர்கள் கொத்மலை பொது மருத்துவமனை, நுவரெலியா மாவட்டப் பொது மருத்துவமனை, கம்பளை மற்றும் நாவலப்பிட்டி மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். விபத்தில் சிக்கியவர்களில் 21 பேர் உயிரிழந்துள்ள நிலையில், மேலும் பலரின் நிலைமை மோசமாகவுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. உயிரிந்தவர்களில் பெண்களும், ஆண்களும் உள்டங்குகின்றனர்.
பஸ்ஸின் சாரதியும் உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக விசாரணை முன்னெடுத்துவரும் கொத்மலைப் பொலிஸார், விபத்துக்கு பஸ்ஸில் ஏற்பட்ட திடீர் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கின்றனர்.
சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துப் பதில் அமைச்சர் பிரசன்ன குமார குணசேன ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளனர். (அ-எ-இ)

## விபத்தில்...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் இது தொடர்பில் ஜனாதிபதி நிதியத்துக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.
இறந்தவர்களின் குடும்பத்துக்கு இந்த நிதி உடனடியாக வழங்கப்படவுள்ளது என்றும், இலங்கை போககுவரத்துச் சபை மற்றும் காப்புறுதி நிதியம் என்பவற்றின் மூலம் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதேவேளை, இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இந்த விபத்துப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.
நாட்டில் அதிகரித்துவரும் வீதி விபத்துக்கள் தொடர்பாக அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. இதுபோன்ற விபத்துகளைத் தடுப்பதற்கு நிரந்தரத் திட்டத்தை வகுப்பதற்கு அரசாங்கம் தற்போது மும்முரமாகச் செயற்பட்டு வருகின்றது. தற்போதுள்ள சட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலமும், சாரதிகளின் மனப்பான்மையை மேம்படுத்துவதன் மூலமும் இவ்வாறான விபத்துகளைக் கணிசமாகக் குறைக்கமுடியும்.
இந்தக் கொடூரமான விபத்தில் உயிரிழந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திக்கின்றேன் என்றும் அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## திருமணமான...

சம்பவம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது. சுழிபுரம், பெரியபுலோவைச் சேர்ந்த பரஞ்சோதி ததீஸ்வரன் (வயது-29) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
இவருக்குக் கடந்த மாதம் 9ஆம் திகதி திருமணம் நடந்துள்ளது. நேற்று குறித்த இளைஞன் தம்பதியாக உறவினர் ஒருவரின் வீட்டுக்கு திருமண விருந்துக்குச் சென்றுள்ளனர். வீடுதிரும்பியதும் ததீஸ்வரனுக்கு வாந்தி ஏற்பட்டுள்ளது. அருகில் உள்ள மருத்துவர் ஒருவரிடம் சென்று சிசிச்சை பெற்றபோதும் தொடர்ந்து வாந்தி ஏற்பட்டுள்ளது.
உறவினர்கள் அவரைச் சங்கானை மருத்துவமனைக்குக் கொண்டுசென்றுள்ளனர். ஆயினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மாரடைப்புக் காரணமாகவே மரணம் சம்பவித்துள்ளது என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-எ-26)

## அரசியல்...

மகஸின் சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் தனது சமூகவலைத்தளக் கணக்கில் பதிவிட்டுள்ளதாவது:-
தமிழ் அரசியல் கைதியான கிருபாகரன் எவ்விதமான காரணங்களும் கூறப்படாது கடந்த ஒக்ரோபர் மாதம் மகஸின் சிறைச்சாலையில் இருந்து அம்பாந்தோட்டைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
அவருக்கு எதிரான 4 வழக்குகளில் 3 வழக்குகள் கொழும்பில் நடைபெறுகின்றன. அவர் சிறை மாற்றப்பட்டுள்ளதால் கிருபாகரனுக்கு சரியாகக் கடமையாற்ற முடியாதுள்ளது என்றும், கிருபாகரனைச் சந்திக்க முடியாதுள்ளது என்றும் அவரது சட்டத்தரணி எனக்குச் சுட்டிக்காட்டியிருந்தார்.
6 மாதங்களுக்கு முன்னர் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் உபுல் தெனியவைத் தொடர்புகொண்டு இது தொடர்பில் சுட்டிக்காட்டினேன். ஒழுக்காற்று நடவடிக்கைக்காகவே அவர் அம்பாந்தோட்டை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்றும், அவரது தண்டனைக்காலம் முடிந்ததும் அவர் மீண்டும் மகஸின் சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்படுவார் என்றும் அவர் கூறியிருந்தார்.
இதுவரையில் கிருபாகரன் மகஸின் சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்படாத நிலையில், சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் என்னைச் சந்திப்பத்தை தவிர்த்துவருகின்றார். சிறைச்சாலை ஆணையாளர் திஸநாயக்க என்பவரைச் சந்தித்தபோது, கிருபாகரனின் தண்டனை விடயங்கள் தொடர்பாக எதுவும் தெரியாது என்று தெரிவித்த அவர், புலனாய்வுப் பிரிவால் வழங்கப்பட்ட அறிக்கை ஒன்றின் அடிப்படையில் அவர் அம்பாந்தோட்டை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார் என்றும், அந்த அறிக்கை தன்னிடம் இல்லை என்றும் தெரிவித்ததுடன், இந்தவிடயம் தொடர்பாக ஆராய்ந்து திங்கட்கிழமை (இன்று) காரணத்தைக் கூறுகின்றேன் என்றும் தெரிவித்தார்.
கிருபாகரன் ஏன் இடமாற்றப்பட்டார் என்பது கிருபாகரனுக்கோ அல்லது அவரது சட்டத்தரணிக்கோ தெரிவிக்கப்படவில்லை, நீதிமன்றத்துக்கும் அறிவிக்கப்படவில்லை என்பதையும், இது வழமையான விதிமுறைகளை மீறுவதாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டினேன் - என்றுள்ளது. (அ-எ-125)

## குழந்தையை...

இறம்பொடை, கெரண்டியெல்ல பிரதேசத்தில் நேற்றுக் காலை நடந்த பஸ் விபத்தில் தாய் ஒருவர் தனது குழந்தையைக் காப்பாற்றிய காட்சி பலரையும் நெகிழ வைத்துள்ளது.
100 அடிப் பள்ளத்தில் பாய்ந்து பஸ் விபத்துக்குள்ளான நிலையில், பஸ்ஸில் இருந்த பலரும் அதற்குள் சிக்கிக் கொண்டுள்ளனர். கைக்குழந்தையுடன் பயணித்த தாய் ஒருவரும் பஸ்ஸுக்கு அடியில் சிக்குண்டு வெளியே வரமுடியாத நிலையில் நசியுண்டிருந்தார். ஆனாலும் அவர் தனது குழந்தைக்கு காயங்கள் ஏற்படாதவகையில் தனது உடலால் மறைத்து வைத்திருந்த ஒளிப்படம் சமூக வலைத்தளங்களில் நேற்று அதிகம் பகிரப்பட்டது.
அன்னையர் தினமான நேற்று இந்த ஒளிப்படம் பலராலும் பகிரப்பட்டு, நெகிழ்ச்சியுடன் கருத்துகள் பதிவிடப்பட்டிருந்ததைச் சமூகவலைத்தளங்களில் காண முடிந்தது. விபத்தில் காயமடைந்த தாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (அ-எ-இ)

## வலி.வடக்கு...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பித்திருக்கும் நிலையில், வலி. வடக்கில் விடுவிக்கப்படாத மக்கள் காணிகளில் இராணுவத்தினர் பெரும் விமரிசையாக வெசாக் கொண்டாட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.
வலி.வடக்கில் தமிழ் மக்களின் காணிகள் பலவும் இராணுவத்தால் விடுவிக்கப்படாதுள்ளன. அந்தக் காணிகளை விடுவிக்கவேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றபோதும், பல்வேறு காரணங்களைக் காட்டி இராணுவம் காணிகளை விடுவிக்காது இழுத்தடித்து வருகின்றது. அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் போர் முடிந்து தசாப்த காலத்தின் பின்னரும் இடம்பெயர்ந்து வாழவேண்டிய நிலையில் உள்ளனர்.
இந்தநிலையில் அடாத்தாகக் கையகப்படுத்தி வைத்திருக்கும் பொதுமக்களின் காணிகளில் இராணுவத்தினர் தற்போது பெரும் எடுப்பில் வெசாக் கொண்டாட்டங்களை ஆரம்பித்துள்ளனர். பலாலி வடக்கில் ஜே/254 கிராம அலுவலர் பிரிவில் உள்ள பொதுமக்களின் காணிகளிலும், பலாலி வடமேற்கில் ஜே/255 கிராம அலுவலர் பிரிவில் உள்ள காணிகளிலும் வெசாக் கூடுகள் கொண்டு அலங்கரிக்கப்பட்டு வெசாக் கொண்டாட்டங்கள் விமரிசையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இந்தக் காணிகளுக்கு அருகில் வலி. வடக்கு பிரதேசசபைக்குச் சொந்தமான பொதுச் சந்தை ஒன்றும் உள்ளது. அதையும் இராணுவத்தினர் தற்போது வரை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றனர்.
போரில் கொல்லப்பட்ட தங்களின் உறவுகளை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் தமிழ் மக்களால் கடைப்பிடிக்கப்படும் நேரத்தில், இராணுவத்தினரால் வெசாக் கொண்டாட்டங்கள் பெருமெடுப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தைத் குழப்பி, திசைதிருப்பும் வகையிலேயே பௌத்த மக்கள் வாழாத-இன்னமும் படைக்கட்டுப்பாட்டில் இருக்கும் தமிழ்மக்களின் நிலங்களில் - இவ்வாறு பெருமெடுப்பில் இராணுவத்தால் வெசாக் கொண்டாட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தமிழ் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-எ-26)

## இனப்படுகொலையை....

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படவில்லை என்று கூறுபவர்களுக்கு பிரம்டனில் இடமில்லை கனடாவில் இடமில்லை, கொழும்புக்குத் திரும்பிச் செல்லுங்கள் என்று தெரிவித்துள்ளார் கனடாவின் பிரம்டன் நகர மேயர் பட்ரிக் பிரவுண்.
கனடா, பிரம்டன் நகரத்தில் “தமிழர் இனவழிப்பு நினைவுத் தூபி” உத்தியோகபூர்வமாகத் திறக்கப்பட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே மேயர் பட்ரிக் பிரவுண் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நாங்கள் தமிழர்களின் இனவழிப்பின் அளவை மறந்துவிடக்கூடாது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கை அரசாங்கத்தால் படுகொலை செய்யப்பட்டார்கள். இலங்கை அரசாங்கம் தவறான தகவல்களைப் பரப்பி வருகின்றது. அவர்கள் உண்மைக்காகவும், நீதிக்காகவும் குரல்கொடுத்த தமிழர்களை இழிவுபடுத்தவும், தாக்கவும் முயன்றனர். இது ஓர் உடல் ரீதியான இனப்படுகொலை மட்டுமல்ல, உலகின் அனைத்துப் பகுதிகளிலுள்ள தமிழர்கள் மீதான தாக்குதல்.
தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி எனது நகரத்தில் உருவாகியுள்ளமையால் நான் பெருமிததம் அடைகின்றேன். ஆனால் இன்னமும் செய்யவேண்டிய பணிகள் உள்ளன - என்றார். (அ-எ-இ)

வேலை வாய்ப்புக்கள்
Driver, Clerk, Accounts Admin, IT Admin, Office Admin, Telephone Operator, Online Staffs, Part Time Staffs.
தொடர்புகளுக்கு: 074 083 3368
076 098 4532

# மரண அறிவித்தல்

**தோற்றம்**

**22 . 09 . 1931**



**மறைவு**

**09 . 05 . 2025**

## சோமசுந்தரம் தங்கம்மா

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் தங்கம்மா அவர்கள் கடந்த (09.05.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற அன்னலிங்கம் மற்றும் நாகேஸ்வரி (சின்னம்மா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகராஜா (இந்தியா), பஞ்சலிங்கம் (லண்டன்), கோணேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற நித்தியானந்தம் மற்றும் ரஞ்சினி (ஞானம் பெயின்ஸ்), சச்சிதானந்தம் (சவுதி), சிவானந்தம், பரமானந்தம், சாந்தி (லண்டன்), லலிதாம்பிகை (குட்டி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயபாலினி (இந்தியா), ஜெயமாலா (லண்டன்), ராஜேந்திரம் (கனடா), செல்வராணி (ஜேர்மனி), காலஞ்சென்ற விஜயரட்ணம், புஷ்பமலர் (கனடா), ரஜனி, குலநந்தினி, சிவசந்திரராஜா (லண்டன்), ஜெகநாதன் (ஜெகன்-போட்டோ) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரமகுமார்-மோகனா, சுந்தர்ஜி, கஜன்-சத்தியா, பமிலா, ஆதிரை-செந்தூரன், ஆதிரையார்-சௌமியா, துவாரகன்-ரேனுகா, வாசுகி-அச்சுதன், ஆருத்திரன், யசோதரன், பிரபவன்-வோஷிகா, அஜந்தி-செந்தூரன், ஜனார்த்தன்-துஷாந்தி, திருவேரகன்-அஜந்தினி, சிவாஞ்சலி-வியுதன், கௌதமி, ராகவன், ஆதவன், சிவதர்சன், ஆரணி, பரணீதரன், பைரவி, அனுராகவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆதித், ஆரிஸ், மித்ரா, ஆருஷா, ஆரியன், ஆரா, அதிரா, ஆரன், நிஷாந், அகின், ஹரிஸ், சர்வின், ஸ்ரீவர்சினி, ஸ்ரீலக்ஷ்மி, ஸ்ரீதேஜஸ், சஞ்சய், ஜனனி, மிதுனா, யதீனா, பவனிகா, கிருஷ்மிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (13.05.2025) செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 766 6746**
**077 718 5955**
**077 605 8216**

**பழைய தபாற்கந்தோர் வீதி,**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.05. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.